
OLLECTORS AND POLICE OFFICERS
25th TO 27th JULY 1994
தமிழரசு
1.8.1994 ரூ.3

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து
**காதிகிராப்ட்**
அங்காடிகளில் கிடைக்கும்



DIPR No.678/DIS/93/247

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்....


மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
காவல்துறை உயர்
அதிகாரிகள் மாநாட்டில்
மாண்புமிகு முதல்வர் உரை .......... 2

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு
மாண்புமிகு முதல்வர்
கேடயம் வழங்கினார் .......... 12

படமும் செய்தியும் .......... 16

கலைமாமணி விருது
வழங்கும் விழா:
மாண்புமிகு முதல்வர் உரை .......... 19

பணி நிறைவுப் பாராட்டு விழா .......... 27

புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ. ஜெயலலிதா
பள்ளிக் குழந்தைகள் சிறப்பு
நல முகாம் தொடக்க விழா .......... 29

1,300 ஆண்டுகட்கு முற்பட்ட
அரியதொரு நடுகல் கண்டுபிடிப்பு .......... 30

இராமநாதபுரம் மாவட்டத்தில்
ரூ.1 கோடி செலவில் எம்.ஜி.ஆர்.
விளையாட்டு வளாகம் .......... 31

ஆலய ஆன்மீகச் சுற்றுலா .......... 32



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2025
ஆடித் திங்கள்: 16
மலர்: 25 இதழ்: 3

1.8.1994
விலை ரூபாய் மூன்று




### இதழ்தோறும் ஓர் இனிய குறள்

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (5)

■ கடவுளின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துகின்றவரிடம், அறியாமையால் விளையும் இருவகை வினையும் சேர்வதில்லை.

# தேசிய திட்டங்களில் தமிழ்நாடு வகிக்கும் முதன்மையான நிலையைத் தொடர்ந்து காப்பாற்றிட பெரும் முயற்சி எடுக்க வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொடக்க உரை

### முதல் அட்டை சொல்லும் செய்தி:

கடைசியாக நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாடு முடிந்து சரியாகப் பதின்மூன்று மாதங்களுக்குப் பிறகு நாம் இன்று கூடி உள்ளோம். இந்தப் பதின்மூன்று மாதங்களில் தமிழகம் அமைதியாகவும் உறுதியாகவும், மகத்தான சாதனைகளும் செயல்பாடுகளும், மிக்கதாகவும் இருந்தது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

1993-94-ஆம் ஆண்டிற்கு நாம் அமைத்துக் கொண்ட திட்டக் குறியீடு (target) ரூ.2101 கோடியாகும். ஆனால், நமது சாதனை ரூபாய் 2234.73 கோடியாக உள்ளது. இருபது அம்சத் திட்டத்தை அமல்படுத்துவதில் நாட்டிலேயே நாம் முதலிடத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதைக் காணும்போது, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சாதனையைப் புரிந்தமைக்காக மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டின் பல பகுதிகளில் பிரிவினை மற்றும் நாட்டைத் துண்டாட வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படும் இயக்கங்கள், தேச விரோத வகுப்புவாதச் சக்திகளின் தொடர்ந்த தாக்குதல்கள் ஆகியவற்றால், இந்தக் காலகட்டத்தில், தமிழ்நாடு அமைதியாகவே இருந்திருக்கிறது. நமது பாரம்பரியம் மிக்க சகிப்புத் தன்மை மற்றும் நல்லிணக்கத்துடன், வகுப்புவாத மற்றும் சாதிப் பிரச்சினைகளைச் சந்தித்தோம். இந்தக் கால கட்டத்தில், மற்றைய மாநிலங்களில் நிலவி வந்த மோசமான சூழ்நிலைக்கு நேர் எதிராக, நமது மாநிலத்தில் அமைதியும், ஸ்திரத் தன்மையும் நிலவிட, காவல்துறையும், நீதித்துறையும், திட்டமிட்ட போராட்டக் காலங்களிலும், நெருக்கடி நேரங்களிலும் தமது விரைவான, சுறுசுறுப்பான நடவடிக்கைகளினால் மிகுந்த சேவை புரிந்திருக்கிறது.

பொது அமைதி நிலவ வேண்டியதன் அவசியத்தை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை. ஏனென்றால் வளர்ச்சி என்பது, இதனை அடிப்படையாக வைத்துத்தான் கட்டப்பட வேண்டும்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, முந்தைய இரண்டு ஆண்டுகளில் கொலைகளும், குண்டு வெடிப்புக் கலாச்சாரங்களும் தமிழ் நாட்டைப் பீடித்திருந்தன. தீவிரவாதிகள், வன்முறையாளர்கள் மீது ஓய்வின்றித் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால், தமிழக மக்களின் மனதில் இருந்து இந்த வன்முறைக் கலாச்சாரப் பயத்தை விரட்டி அடித்துவிட்டோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அபாயகரமான தீவிரவாதச் சக்திகளை அடக்கும்போது ஒருவருடைய வெற்றிகளினால் திருப்தி அடைந்து ஓய்வு எடுத்துவிட முடியாது.

ஏனெனில், அவை 'பீனிக்ஸ்' (Phoenix) பறவையைப் போன்று எந்த நேரத்திலும் தலை தூக்கலாம். அவ்வாறு எந்த நேரத்தில் தலைதூக்கினாலும் அதை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். இம்மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய முக்கிய பொருளாகும் இது. குறிப்பாக, உளவுத் துறைத் தகவல்களைச் சேகரிக்கும் நமது முயற்சிகளின் தரத்தை மேம்படுத்த,




வேண்டியதின் அவசியத்தை-நமது கடலோரப் பகுதிகளில் தீவிர்மான கண்காணிப்பு இருக்க வேண்டிய தன் அவசியத்தை வெடி மருந்துகள் வருவதைக் குறித்து இடைவிடாத சோதனைகள், எரிபொருள், எலக்ட்ரானிக்ஸ் கருவிகள், வெடிகுண்டுகள் கடத்தப்படுவதைக் கண்டுபிடிக்க, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதை வலியுறுத்த வேண்டுகிறேன். இங்குள்ள சிறப்பு முகாம்களில் நிறைய விரக்தியடைந்த, முரட்டுத்தனமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த நேரத்திலும் ப்ாதுகாப்பு என்பது கடினமான காரியமாகும். இங்கு கடுமையான கண்காணிப்பு இருக்க வேண்டும். தப்பிச் செல்ல முயற்சித்தல், திருட்டுத்தனமாகப் பொருட்களைக் கடத்தல், வெளிநாடுகளிலுள்ள தீவிரவாதிகளுடன சட்ட விரோதமான தொடர்பு ஆகியவை உறுதியாக ஒழிக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் இந்த முகாமிற்கு அவ்வப்போது சென்று, பாதுகாப்பை உறுதி செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்தில் அவர்கள் கூறுகின்ற நியாயமான குறை





**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாட்டில்... (25.7.94)**

களைப் போக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் மனிதச் சக்திகளைப் பொருத்தமட்டில் உங்கள் முயற்சிகளுக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பை நல்கும் என்று உறுதிமொழி கூற விரும்புகிறேன்.

சாதி-இன வேறுபாடுகளின் அடிப்படையில் திடீரெனப் பல பதட்டமான சூழ்நிலைகள் தோன்றுகின்றன. சாதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள், தாங்கள் இருப்பதைக் காட்டிக்கொள்ள பொது இடங்கள், மத நிலையங்கள் ஆகியவற்றிற்கருகில் கொடிகள் நாட்டுவது, சிலைகள் வைப்பது, நினைவுச் சின்னம் வைப்பது, போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. உளவுத் துறைகளின் தகவல்களை, மாவட்ட ஆட்சித்தலைவர்களும், காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் பகிர்ந்து கொள்வதில் நெருக்கமாக ஈடுபட்டு, திடீரெனத் துயரச் சம்பவங்கள் ஏற்படுவதை, அமைதிக் கூட்டங்கள் போன்றவற்றை நடத்துவதன் மூலம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சில மாவட்டங்களில், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்குச் சரியான உளவுத் தகவல்கள் தரப்படுவதில்லையென்றும், மாவட்ட ஆட்சித்தலைவரும் காவல்துறைக் கண்காணிப்பாளரும் கூட்டாக வாரம்தோறும் கூட்டங்கள் நடத்தி, அடுத்துவரும் வாரங்கள் பற்றிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்றும் தகவல்கள் எனக்கு வருகின்றன. சந்தேகத்திற்குரிய நபர்களைப் பற்றியும், உள்ளூரில் உணர்ச்சிகரமான மாறுதல்கள் ஏற்படுவதைப் பற்றியும் கிராம நிர்வாக அலுவலர் மட்டத்தில் தகவல்கள் கண்காணிக்கப்பட வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கண்காணிப்பாளர்களும் இது குறித்துத் தங்கள் ஆலோசனைகளைக் கூறலாம்.

உள்துறைச் செயலர் கூறுவதைப் போல, குற்றங்களைத் தடுக்க, காவல்துறையினர் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்காக அவர்களை, இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்ட விரும்புகிறேன். நாளை சிறப்பாக நடைபெறவுள்ள காவல்துறையினரின் கூட்டத்தில் இது குறித்து நான் விரிவாக விவாதிக்க இருப்பதால், பெருகிவரும் மனித உரிமை மீறல்களினால் எனக்கு ஏற்பட்டுள்ள பதட்டத்தை உங்களுடன் பரிமாறிக்கொள்ள விரும்புகிறேன். காவல் கைதிகளின் மீது இழைக்கப்படும் வன்முறைகள், மிக மோசமான-செயல்கள் முதலியவை, அரசாங்கம் மற்றும் காவல்துறையின் மதிப்பைக் கெடுப்பதாகவும் அமைந்துள்ளது.,

காவல்துறையினர் சட்டத்தின் பாதுகாவலர்கள். அதை அவர்கள் என்ன பாடுபட்டேனும் காப்பாற்ற வேண்டும். இது போன்ற சம்பவங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஜஸ்டீனியன் எழுப்பிய "காவலர்களையே யார் காப்பார்கள்?" என்ற அடிப்படைக் கேள்விகளையே எழுப்புகின்றன.

எங்களுக்கு முன்பு, காவல்துறையை நவீனமயமாக்கவும், அவர்களின் நலனுக்காகவும் முப்பதாண்டுகளில் செய்யப்பட்டதை விட நாங்கள் அதிகமாகச் செய்துள்ளோம். இப்போது, காவல் கைதிகளின் மீது வன்முறையைக் குறைக்க, அவர்களை விசாரிக்கும்போது, பயன்படுத்தும் வன்முறையைக் களைய முதுநிலை அலுவலர்கள், திறமையான, குறுகிய கால, நீண்டகாலத் திட்டங்களை வகுதத்துத்தர வேண்டுமென நான் எதிர்பார்க்கிறேன். இதில், இறுதியில் நம்மை எடைபோடுவது மக்களே ஆவர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 25.7.1994 அன்று தலைமைச் செயலகம் புதிய கட்டடத்தில் உள்ள புதிய மாநாட்டு அரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கான கூட்டுக்கூட்டத்தை, தலைமையேற்று நடத்தி வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.நா.ஹரிபாஸ்கர் வரவேற்றார். பின்னர், மாநாட்டுக் கூடத்தில் மலர்ச் செண்டும், சால்வையும் வழங்கினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், கூட்டத்திற்கு வந்துள்ளவர்களையும் அவர் வரவேற்றுப் பேசினார். பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

காவல்துறை இயக்குநர் திரு.எஸ். ஸ்ரீபால், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் ஒழுங்கு) திரு. வால்டர் தேவாரம், ஒற்றாய்வுப் பிரிவின் காவல் துறைத் தலைவர் திரு. ஏ.எக்ஸ். அலெக்ஸாண்டர், உள்துறைச் செயலாளர் திரு.பி.வி. ராஜாராமன் ஆகியோரும், அவர்களைத் தொடர்ந்து 23 மாவட்ட ஆட்சித் தலைவர்களும், 23 மாவட்டக் கண்காணிப்பாளர்களும், 7 சரகக் காவல்துறைத் துணைத் தலைவர்களும், சென்னை நகரக் காவல் துறை ஆணையாளர் திரு.ஆர்.ராஜகோபாலன், அவர்களும், கோயம்புத்தூர் மாவட்டக் காவல்துறை ஆணையர் அவர்களும், மதுரை மாவட்டக் காவல்துறை ஆணையாளர் அவர்களும் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அவகளது கருத்துக்களைக் கேட்டறிந்து, அவ்வப்போது தலைமைச் செயலாளர் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

இக்கூட்டம் காலை 10.00 மணிக்குத் தொடங்கி மாலை 7.மணி15 நிமிடம் வரை நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா, அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு உயர் அதிகாரிகளுக்கும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும் பகல் விருந்து அளித்தார்.

நமது பலமாகவும், சக்தியாகவும் நாம் இங்கு இருப்பதற்கே காரணமாகவும் விளங்கும், ஆதாரமாக இருப்பவர்கள் நம் மாநிலத்து மக்களே.

தமிழக மக்களின், குறிப்பாக நலிவடைந்த பிரிவினர், ஆதி திராவிட மற்றும் பிற்படுத்தப்பட்டவர்களும் அவர்களின் நலனுமே என் மனதில் முக்கிய இடத்தையும், அரசுக் கொள்கையின் மைய இடத்தையும் பிடித்துள்ளது. பல அரசியல் கட்சிகள் வெளிப்படுத்திய தெளிவற்ற, ஒத்துப்போகாத போக்கினையும் மீறி, மாநிலத்தின் விதியைப் பாதிக்கும் இரண்டு முக்கியப் பிரச்சினைகளான, பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு 69 சதவிகித இடஒதுக்கீடு, மற்றும் காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக நாங்கள் எடுத்துள்ள உறுதியான நிலையை நீங்கள் அறிவீர்கள்.

மேட்டூரில் காவிரி நீரின் வரத்து போதுமான அளவு உள்ளதென்றும், விரைவாக அங்கு நீர் நிரம்பி வருகிறதென்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரச்சினைக்குரிய இவ்விஷயத்தில் தமிழ் நாட்டின் நிலை சரியென்பதை மற்றுமொரு ஆண்டில் இயற்கையின் கொடைத்தன்மை நிரூபித்துவிட்டது. காவிரி நீர்ப்பாசனப் பகுதிகளில் உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்கள், விதை சரியான நேரத்தில் விதைக்கப்படுவதையும், ஏராளமான பகுதிகளை வேளாண்மைக்குக் கொணர்ந்து தேவையானவைகளை வழங்கி, கடனைத் தந்து 1995 பொங்கலை வளங்கொழிக்கும் ஒன்றாகத் திகழ்வதை உறுதிசெய்ய வேண்டும்.

முன்னேறிய விவசாயத் தொழில் நுட்பத்தின் பலன்கள் கிராமப்புறங்களில் பரவியுள்ளன. ஆனால், ஏழைகளைவிடப் பணக்காரர்கள் இதனால் பயன்பெறுகிறார்கள். நிலமற்ற விவசாயிகள் தொடர்ந்து ஏழ்மையில் வாடுகின்றனர். அவர்களது கல்வி, சுகாதாரம், சத்துணவு, நீர் விநியோகம் ஆகியவை அவர்களின் வருமானத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. ஆதிதிராவிடர்களின் விஷயத்தில் ஜாதி அம்சங்களினால் இப்பிரச்சினை மேலும் தீவிரமடைந்துள்ளது.

நிலமற்ற ஏழைகளின், குறிப்பாக, வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலை ஜாதிப்பிரச்சினைகளால் மேலும் மோசமாகி வரும்போது, கடைப்பிடிக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கை பற்றி நன்மை தீமைகளை நாம் விவாதிப்பதில் எந்தப் பலனும் இருக்காது என நான் கருதுகிறேன். மக்கள் காத்திருக்கமாட்டார்கள். ஏழைகள் காத்திருக்க முடியாது. இக்காரணத்திற்காக இம் மாநிலத்தில் வாழும் அனைத்து ஆதிதிராவிடர்களுக்கும் ஐந்து அடிப்படை வசதிகளை வழங்க, குறிப்பிட்ட கால வரம்புக்குட்பட்ட உடனடித் திட்டத்தை நான் துவக்கியுள்ளேன். இத்திட்டத்தின் கீழ் அனைத்து ஆதிதிராவிடர்களுக்கும் கீழ்க் கண்ட வசதிகள் ஒன்றரை




மாவட்டக் காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாட்டில் (26.7.94)

ஆண்டுகளுக்குள் அதாவது 1995 டிசம்பருக்குள் செய்துதரப்படும்.

1. வீட்டுமனைகள்

2. குடிநீர்

3. இணைப்புச் சாலைகள்

4. குடிசை விளக்குகள்

5. சுடுகாடு - அதற்குச் சாலைகள்

வளர்ந்து வரும் நேரடி, மறைமுக மானிய செலவுகளைப்பற்றி கவலைப்படாமல், ஏழைகளுக்கு சமுதாயப் பாதுகாப்பை வழங்குவதென நாம் உறுதி பூண்டுள்ளதால், சிறப்புத் திட்டத்தின்கீழ் ரூ.551.39 கோடிக்கு மகத்தான திட்டம் வகுத்துள்ளோம். ஆதிதிராவிடர்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்க அனைத்துத் துறையினருக்கும் போதுமான பணம் வழங்கப்பட்டுள்ளது. சுடுகாடுகளுக்கும், அங்கு செல்ல பாதைகளுக்காகவும், முதன் முதலில் ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1995 டிசம்பருக்குள் முழுத் திட்டமும் நிறைவேறிவிடும் என எதிர்பார்க்கிறேன். இந்த முழுத் திட்டமும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஆதாரமாகக் கொண்டு இயங்கும். ஆதிதிராவிட குடி இருப்புகளில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் அடிமட்டத்தில் சமூக நெருக்கடிகள் உருவாவதை நாங்கள் பதட்டத்துடன் கண்காணித்து வருகிறோம். ஒன்றரை ஆண்டுகளுக்குள் இந்த அனைத்துக் குடியிருப்புகளுக்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர அனைத்து நடவடிக்கைகள் எடுக்க அரசு உறுதி பூண்டுள்ளது.

முன்பொரு சமயத்தில், வளரும் பொருளாதாரத்தில் கல்வித் துறையின் பிரச்சினைப்பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் கல்வியின் திறமையில், நமக்குள்ள நம்பிக்கை, புதிய தலைமுறையினரின் சிந்தனையிலாவது குறைந்து வருகிறது. தவறான கொள்கையை கடைப்பிடிப்பது அல்லது தவறான விதிகள், போதுமான அடிப்படை வசதிகள் இல்லாமை ஆகியவை பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தும். பெரிய நிதி நெருக்கடி இருப்பினும், மாநிலத்தின் அனைத்துப் பள்ளிகளுக்கும் தண்ணீர் வசதி, கழிப்பிடம், விளையாட்டு மைதானம், மதில் சுவர், போன்ற அடிப்படை வசதிகள் வழங்கும் மாபெரும் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம். முழுத் திட்டமும் 1995 டிசம்பரில் பூர்த்தி செய்யப்படவேண்டும். இத்திட்டத்திற்கு நிதி ஒரு தடையாக இருக்காது. குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் இந்த இலக்கினை அடைய உங்களது யோசனைகளை நான் வரவேற்கிறேன்.

ஆறு மாதத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் நடத்தப்படவிருக்கும் சிறப்பு மருத்துவ முகாம்களில் ஒருங்கிணைந்த நலவாழ்வுச் சோதனைத் திட்டத்தால், 5-15 வயது வரையுள்ள குழந்தைகள் பயனடைவார்கள் என்பதைத் திட்டக் குறிப்பில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். ரூ.70 இலட்சத்திற்கும் மேலாக இதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதை வெற்றிகரமாக நடத்தித் தருவது மாவட்ட ஆட்சித்தலைவர்களின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாகும்.

மனித ஆற்றலை வளர்ப்பது அனைவரின் கடமையாகும். நமது பொருள்கள், தொழில்நுட்பம், நிறுவனங்கள் ஆகியவற்றின் முழுக் கவனம் குழந்தையின் மீது திரும்ப வேண்டும். குழந்தை இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதைவிடுத்து, குழந்தை வளர்ந்து மேம்பாடு அடைய வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டும். நாம் வகுத்துள்ள 15 அம்சக் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தை நீங்கள் அறிவீர்கள். இதன் ஆவணமும் உங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. பிரச்சினைகளுக்கு ஏற்ப, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் விரிவான அமல்படுத்தும் திட்டம், ஆதாரங்களின் அடிப்படை, ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கும் அடிப்படை வசதிகள் ஆகியவை பற்றி விரிவான அறிக்கையை உங்களிடமிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

நிதி ஆதாரங்கள், திட்டங்கள், துறைகள், பணியாளர்கள் ஆகியவை ஒன்றாகக் கூடுதலே இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

இத்திட்டத்தின் குறிக்கோள்கள் வெற்றிகரமாக அடையத் தேவையான தங்களது மாவட்டங்களுக்குரிய குறிப்பிட்ட திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவிக்கலாம்.

வழக்கமாக மாநில அரசைக் குறை கூறுபவர்கள் கூட, கல்வி அறிவு, மக்கள் தொகைக் கட்டுப்பாடு, கிராமப்புறங்களில் நீர் வசதி, ஆகியவற்றில் நமது சாதனைகள் குறித்து தயக்கத்துடன் பாராட்டி வருகிறார்கள். ஆனால், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு தரன் எனக்கு மிகுந்த கவலையளிக்கிறது. மக்களே தங்களுக்கென ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ள உதவுவதே, மக்களுக்கான சிறந்த நலத் திட்டமாகும். பெரும்பான்மையான மக்களுக்கு நல்ல வருமானம் தரக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே நமது முயற்சியாக இருக்க வேண்டும். ஓய்வூதியத் தொகைகளினால் காப்பாற்றப்பட வேண்டிய மக்கள்-குறிப்பாக வயதானோர், உடல் ஊனமுற்றோர், என ஒரு பிரிவு எப்பொழுதும் இருக்கத்தான் செய்யும். ஆனால் இளைஞர்களுக்கும், திறமை படைத்தவருக்கும், வருமானம் வரத்தக்க நடவடிக்கைகளை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். நாம் ஒதுக்கும் ஒவ்வொரு அதிகப்படியான ரூபாயின் உண்மையான மதிப்பு உண்மையாகவே ஏழைகளுக்குச் சேரவேண்டுமேயானால், திட்ட ஒதுக்கீட்டில் பெரிய அளவில், ரூ.2,750 கோடியாக உயர்த்தியதன் விளைவு, கடந்த ஆண்டைவிட 30.80 [illegible] அதிகமாக்கப்பட் [illegible] விளைவு மக்களி [illegible]

அவர்கள் பயனடையவேண்டுமென்றால், அதற்குக் கட்டமைப்பு, நிறுவன மாற்றங்கள் தேவையாகும்.

பெண்கள், பழங்குடியினர், ஆதி திராவிடர் ஆகியோருக்கு ஒதுக்கீட்டுடன் கூடிய உள்ளூர்ச் சட்டங்களில் முக்கிய சட்டத் திருத்தங்களை நாம் கொண்டு வந்துள்ளோம். நமது பஞ்சாயத்து முறையில் மூன்றாவது மாவட்டப் பிரிவை நாம் ஏற்படுத்த உள்ளோம். அதில் மக்கள் பிரதிநித்துவ முறைக்குப் புத்துயிர் ஊட்டப்படும். நாம் நியமித்துள்ள மாநிலத் தேர்தல் ஆணையாளர் கிராம அளவில் உள்ளூர் சுய ஆட்சியை உறுதி செய்யும் முயற்சிகளை மேற்பார்வையிடுவார். அரசின் பல திட்டங்களை நிறைவேற்றுவதும், மேற்பார்வையிடுவதும் சொத்துக்களை உருவாக்கும் திட்டங்களும் மாற்றங்களும், இந்த நிறுவனங்களின் மூலம் மக்களுக்குத் தொடர்புடையதாக இருக்கும். ஒரு சவாலாக விளங்கும், இந்த அதிகாரம் மற்றும் இந்த முக்கிய முயற்சியை நிர்வாகிகளாகிய நீங்கள் ஏற்றுக் கொண்டு, சாதித்து அதில் முழுவதுமாகப் பங்கேற்க வேண்டும். நம் முன்னால் உள்ள பணிகளைக் குறித்தும் இன்று ஆழமாக விவாதிக்க வேண்டும். தற்போதுள்ள ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் பற்றி ஆய்வு செய்வதும் அவசியமாகும்.

இப்பொழுதுள்ள ஆய்வு செய்யும் முறை, சிறந்த திட்டங்களை வடிவமைப்பது, கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்வதிலுள்ள சிரமங்கள், அவைகளைச் சமாளிக்கும் முறைகள் வணிக (பெரும்பாலான திட்டங்களுக்கு நிறுவன நிதி வழங்கும்) வங்கிகளால் கையாளப்படும் சேவைப் பகுதி அணுகுமுறைகளில் உள்ள குறைபாடுகள், ஆகியவைகளைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுது தான், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் எடுக்க இயலும்.

மக்களின் ஆசைகள் அரசிடமிருந்து அவர்களின் எதிர்பார்ப்பு, தாமதமாவதை அவர்களால் பொறுக்கமுடியாமை ஆகியவை நம் அரசியலமைப்பு மற்றும் மக்களாட்சி முறையின் அங்கமாக விளங்குகிறது. இவற்றைக் கூர்மையாகக் கவனித்து, வேகமாகவும், நுட்பமாகவும் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். மக்களின் குறைகளைக் களைவதில் உங்கள் அணுகுமுறைகள், ஏழைகளின் பிரச்சினைகளைக் கையாள்வதில், நலிந்த பிரிவினரிடம் உள்ள உங்கள் மனப்பாங்கு ஆகிய்வற்றைப் பொருத்தமட்டில் பெர்டினண்ட் ரசல் கூறியதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவர் கூறினார்:

'பிரச்சினையின் வேர், நிலையான உலகம் வேண்டுமென நாம் விரும்பினால், மிகவும் எளிமையானது. பழமையானது... நான் சொல்ல விரும்புவது அன்பு அல்லது இரக்கம் ஆகும். இதை நீங்கள் உணர்ந்தால் நீங்கள் வாழ்வதற்கு ஒரு குறிக்கோள் உண்டு. உங்கள் தைரியத்திற்கு அர்த்தம் உண்டு. அறிவு நேர்மைக்கு ஒரு இன்றியமையாத தேவை உண்டு.'

நீங்கள் நிறையப் பணிகளைச் சோதனையிடவும், கிராமங்களுக்குச் செல்லவும், உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள மனுக்களைக் கருணையுடனும், வேகத்துடனும் கவனிக்க உங்களிடம் பணிபுரிபவர்களை நீங்கள் தூண்டுவதற்காகவும், நீங்கள் நிறைய சுற்றுப் பயணம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏழ்மை, சத்துணவு இல்லாமை, வேலை வாய்ப்பின்மை, பசி, நோய் ஆகியவற்றை எதிர்த்துப் போராட நம்முன் உள்ள பணி மகத்தானது ஆனால், முழு ஈடுபாட்டுடன் இதைக் கையாளுவோமேயானால், இங்கே இப்பொழுதே நமது குறிக்கோள்களை எட்ட முடியும் என நான் நம்புகிறேன். இந்த நோக்கம்தான், பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள நம் அனைவருக்கும், சாதனைபுரிந்த உண்மையான உணர்வையும், உண்மையான மகிழ்ச்சியையும் தரும். Wordsworth கூறியதைப் போல,

"Not in Utopio - subterranean fields
some secreted island, Heaven knows where!
But in this very world, which is the world
Of all of us - the place where, in the end
We find our happiness, or not at all!"

உங்களுடைய அருமையான சாதனைகள் குறித்து என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பல தேசிய திட்டங்களில் தமிழ்நாடு வகிக்கும் முதன்மையான நிலையைத் தொடர்ந்து காப்பாற்றிட, வரும் ஆண்டுகளில் பெரும் முயற்சி எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



**தமிழ்நாட்டின் மக்கள்தொகை சுமார் ஆறு கோடியாகும்; உயிருக்கும் உடைமைக்கும் தாய்மார்களின் மானத்தைக் காப்பதற்கும் இருக்கும் காவலர்களின் எண்ணிக்கையோ 69 ஆயிரம்; அதாவது, ஆயிரம் பேருக்கு ஒரு காவலர் என்ற விகிதத்தில் தான் இருக்கிறார்கள்.**

**இப்படி இருந்தும், சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டிப் பாதுகாப்புத்தருவதில் நாம் மிகப் பெரிய சாதனை படைத்திருக்கிறோம்.**

# மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்புகள்

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மாநாட்டில், 27.7.94 அன்று 9 அரசுச் செயலாளர்களும், 23 மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அவ்வப்போது சில கோரிக்கைகளை ஏற்று உடன் அதிகாரிகளுக்கு ஆணை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது முடிவுரையில், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பல்வேறு கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு, அரசின் முடிவுகளை அறிவித்தார்கள்:

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர் கூட்டுக் கூட்டத்தில் முக்கிய கருத்துக்கள் வெளிப்பட்டன. அதை நான் கவனமாகப் பரிசீலித்துக் கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளை எடுத்துள்ளேன்.

1. சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் கையாளக் காவல் துறையினருடன் ஒத்துழைப்பதற்கு வசதியாக அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும் வயர்லெஸ் கருவிகள் வழங்கப்படும்.

2. சிறப்பு முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்கான தினப்படி ரூ. 12ல் இருந்து ரூ. 14 ஆக உயர்த்தப்படும்.

3. சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட கூடுதல் வாகனங்கள் தேவை என்ற நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்குத் தற்போது உள்ள அளவை விடக் கூடுதலாக 2.5 சதவீத எரிபொருள் வழங்கப்படும்.

4. விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் திருச்சி, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தங்கள் மாவட்டங்களில் உள்ள கழிக்கப்பட்ட 12 வாகனங்களுக்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். உடனடியாக அவற்றுக்குப் பதில் புதிய வாகனங்கள் வழங்கப்படும். வாகனங்களைக் கழிப்பதற்கான வழிவகைகளும் எளிதாக்கப்படும்.

5. விழுப்புரம் இராமசாமி படையாட்சியார், நாகப்பட்டினம் காயிதே மில்லத் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களின் ஆட்சித்தலைவர்களுக்கு நுண் அலைத் தொலைபேசிகள் வழங்கப்படும். அனைத்துக் கோட்டாட்சியர்களுக்கும் இதேபோல நுண் அலைத் தொலைபேசிகள் வழங்கப்படும்.

6. விருதுநகர் மற்றும் விழுப்புரம் மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் இரத்த வங்கி நிலையங்களுடன் விபத்துச் சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும்.

7. காமராஜர் மாவட்டத்துக்கு மத்திய சிறைச்சாலை ஒன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் ஏற்படுத்தப்படும்.

8. நிலம் கையகப்படுத்தும் வழக்கு விசாரணைக்காக மட்டும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுவார்.

9. ஆற்றுப் படுகைகளில் சட்ட விரோதமாக மணல் எடுப்பவர்களுக்கு அபராதத் தொகை ரூ.10 ஆயிரம் ஆக உயர்த்தப்படும்.

10. புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா சுகாதாரச் சிகிச்சைத் திட்டத்தின் கீழ், மாணவிகளுக்கான நோய் சிகிச்சைக்காக மட்டும் தனியாக ஒரு பெண் டாக்டர் நியமிக்கப்படுவார்.

11. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மின்சார மோட்டார் பராமரிப்புக்காக ஒரு மின் பணியாளர் நியமிக்கப்படுவார்.

12. நெடுஞ்சாலைகளில் பழுதடையும் வாகனங்களை இழுத்து வர, விருதுநகரில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு ஒரு வேன் கொடுக்கப்படும்.

13. தூத்துக்குடியில் கடலோரப் பாதுகாப்புக் காவல் நிலையம் அமைக்கப்படும்.

14. அனைத்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் 1995-ஆம் ஆண்டுக்குள் குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக, மக்கள் தொகை மற்றும் தூரம் பற்றிய விதிமுறைகள் தளர்த்தப்படும்.

15. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு இனி கூலி முழுவதும் பணமாகக் கொடுக்கப்படும்.

16. நாகை காயிதேமில்லத், தஞ்சாவூர், சிதம்பரனார், இராமநாதபுரம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் சாலை அபிவிருத்திக்காகக் கூடுதல்நிதி ஒதுக்கப்படும்.

17. திருச்சி மாவட்டம் அரியலூர் பகுதியில் ஜப்பான் மூளைக் காய்ச்சல் நோயைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளுக்கு ரூ.13 இலட்சம் சிறப்பு நிதி ஒதுக்கப்படும்.

18. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிறப்புச் சோதனைகள் மற்றும் திட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக எரி பொருள் இருப்பு இருமடங்காக உயர்த்தப்படும்.

19. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சிகளின் ஆய்வாளராக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

20. தஞ்சாவூரில் குந்தவை நாச்சியார்கலைக் கல்லூரியில்கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப் பறைகள் கட்டுவதற்குத் தேவையான நிதி வழங்கப்படும்.

21. இனி எதிர்காலத்தில் அரசுத் தகவல்களில் மேல் சாதி, உயர் சாதி, இந்துக்கள் என்ற குறிப்பு இருக்காது. அதற்குப் பதிலாக மற்ற சாதியினர் என்று மட்டுமே குறிப்பிடப்படும்.

22. அதிகாரிகள் கைப்பற்றும் எரிசாரயத்தை அழிப்பதற்கான விதிமுறைகளை எளிதாக்கச் சட்டத்தில் தேவையான திருத்தம் கொண்டுவரப்படும்.

23. திருப்பத்தூர், மானா மதுரைக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்கப்படும்.

24. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் உள்ள கன்னங்குடி, எஸ்.புதூர் ஆகியவற்றுக்கு வயர்லெஸ் செட்டுகள் வழங்கப்படும்.

25.அதிகாரப்பூர்வமாக அனைத்து மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுபவை விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்துக்கும் வழங்கப்படும்.

26. மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ மின்கருவிகளைப் பழுதுபார்ப்பதற்காக, மாவட்ட மருத்துவமனைகளுக்குத் தலா ரூ.20 ஆயிரமும், தாலுக்கா மருத்துவமனைகளுக்குத் தலா ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும்.

27. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட வளர்ச்சித் திட்டத்துக்காக ரூ 2 கோடி ஒதுக் கப்பட்டுள்ளது.

28. நிலம் கையகப்படுத்துவது தொடர்பான சட்டப் பிரச்சினைகளைக் கவனிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத் திற்கு கூடுதலாக ஒரு அரசு வழக் கறிஞர் நியமிக்கப்படுவார்.

29. ஆதிதிராவிட மாணவிகளுக் கான உதவிப் பணம் வழங்கும் திட்டம் காமராசர் மாவட்டத் துக்கு விரிவுபடுத்தப்படும்.

30. தருமபுரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி தாலுக்கா, பிற்பட்ட தாலுக்காவாக அறிவிக் கப்படும்.

**மலர்களைச் சுற்றி மனதைத்தொடும் நறுமணம் கமழும்; அது போலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும்.**

**— சாக்ரடீஸ்**

31. அரூர் தாலுக்கா பிரிக்கப் படுவது பற்றி அடுத்த நிதி ஆண்டில் முடிவு செய்யப்படும்.

32. இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் ஆண்கள் கல்லூரி ஒன்று தொடங்கப்படும்.

33. அனைத்து ஆதிதிராவிட மகளிர் விடுதிகளுக்கும் காவல் காரர் நியமிக்கப்படுவார்.

34. அயோடியம் இல்லாத உப்பைப் பயன்படுத்த தமிழகத்தில் தடை விதிக்கப்படும்.

35. கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களை இணைக்கும் சாலைப் பாலத்தை மீண்டும் கட்டும் பணி உடனே தொடங்கப்படும்.

இந்த மாநாட்டில் விவாதிக்கப் பட்ட பிரச்சினைகளைக் கருத் தில் கொண்டு ஏழைகளுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும் உயர்ந்த நோக்கத்துடன் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டங்களுக்குத் திரும்ப வேண்டும் என விரும்பு கிறேன். இப்போது முதல் 1995 வரை நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்குகளை அடைய ஆதி திராவிடர்கள் பள்ளிக்கூட அபிவிருத்தி கிராமப்புற வேலை வாய்ப்பு போன்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் ஒழுங்கான முறையில் நிறைவேற்றப்படுகின் றனவா எனக் கண்காணிப் பார்கள் எனவும் எதிர்பார்க் கிறேன்.

ஏழைகளுக்கும் உதவிகள் தேவைப்படுவோருக்கும் சேவை செய்வதில் சோர்வின்றிக் கடுமையாகப் பாடுபடவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

தனிப்பட்ட முறையிலும் கருணையுடன் கூடிய கவனத் துடனும், திட்டப்பணிகளை ஒழுங்காக ஆய்வு செய்தல்,

## கன்னியாகுமரியில்
# 133 அடி உயர வள்ளுவர் சிலை ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படுகிறது

### மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தகவல்

**க**ன்னியாகுமரியில் ரூ.5 கோடி செலவில் 133 அடி உயர வள்ளுவர் சிலை நிறுவப்படுகிறது என்று மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 5.8.94 அன்று சேலத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:

### மினி பொருட்காட்சிகள்:

தமிழக முதல் அமைச்சர் பொறுப் பேற்றதற்கு முன்பு அரசு சார்பில் 3 பொருட் காட்சிகள் நடந்து வந்தன. முதல்வர் பொறுப் பேற்றதும் மேலும் 2 பொருட்காட்சிகள் உருவாக்கப்பட்டன. தற்போது மேலும் 2 பொருட்காட்சிகள் வேலூர், கடலூரில், ரூ 30 லட்சம் செலவில் தொடங்கி இருக்கிறோம்.

அதுபோல கிருஷ்ணகிரி, தூத்துக்குடி, காரைக்குடி, இராமநாதபுரம், திருப்பூர் ஆகிய 5 இடங்களில் ரூ 25 லட்சம் செலவில் மினி பொருட்காட்சி தொடங்க இருக்கிறோம்.

### சாதனை விளக்க முகாம்

பல்துறைச் சாதனை விளக்க முகாம்களை விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், மாவட்டம், திண்டுக்கல் அண்ணா மாவட்டம் திருவண்ணாமலை-சம்புவராயர், பசும்பொன் மாவட்டம் ஆகிய 4 இடங்களில் ரூ.10 லட்சம் செலவில் அமைக்க உள்ளோம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவு இல்லம் அமைக்க இடம் தேர்வு செய்ய 10 -ந் தேதி அங்கு செல்கிறோம். அதுபோல ஜீவானந்தத்துக்கும் நினைவு இல்லம் அமைக்கப்பட இருக்கிறது.

சென்னை ராஜாஜி கலையரங்கம் ரூ.18 லட்சம் செலவில் பராமரிக்கப்பட உள்ளது. அதுபோல வள்ளுவர் கோட்டம் ரூ.26 லட்சம் செலவில் சீரமைக்கப்படும்.

### வள்ளுவர் சிலை

கன்னியாகுமரியில் ரூ.5 கோடி செலவில் 133 அடி உயரத்தில் வள்ளுவர் சிலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அடுத்த ஆண்டு (1995) மார்ச் மாதத்திற்குள் அந்தச் சிலை நிறுவப்படும்.

தீரன் சின்னமலை, புலித்தேவன், அழகு முத்து யாதவ், முத்துராமலிங்க சேதுபதி ஆகியவர்களுக்குப் பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது.

---

நலத்திட்டங்களை முறைப்படி பரிசீலனை செய்தல், ஆகிய வற்றின் மூலம் பொது மக்களின் குறைகளை நீங்கள் விரைவில் தீர்த்து வைக்கமுடியும். இந்தச் சமயத்தில் எச்.டபிள்யு லாங் பெல்லோ சொன்ன, என்றும் நிலைத்து இருக்கும் வார்த்தை களை உங்கள் அனைவருக்கும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

''The heights by great men
reached and kept
were not attained by sudden flight.
But they, while their companions
slept were toiling upward in the
night''

பெரிய மனிதர்கள் உயர்ந்த நிலையைத் திடீரென்று அடைந்து விடுவதில்லை. மற்ற வர்களெல்லாம் தூங்கிக் கொண்டு இருக்கும் வேளை யிலும், கடுமையாக உழைத்த தனால்தான் அவர்கள் அந்த நிலையை அடைகிறார்கள்.

அரசாங்கத்தின் திட்டங்க ளையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதில் மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உள்ள ஈடுபாட்டை நான் பாராட்டு கிறேன். பொதுவாக அவர்கள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் அவர்கள் தங்களை முழுமையாக ஈடு படுத்திக் கொள்கிறார்கள்.

சத்துணவு இல்லாமை, நோய், தேவைகள் ஆகியவை இல்லாத 2000-வது ஆண்டுக்கு தமிழ் நாட்டு மக்களைஅழைத்துச் செல்ல இருக்கும் நமது உயர்ந்த இலட்சியத்தை அடைய, நீங்கள் தொடர்ந்து முயற்சிக்க வேண்டு மென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாநாட்டின் இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர்களில் வயதில் இளையவரான கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அம்புஜ் சர்மா அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர் களுக்கு மலர்ச் செண்டு வழங்கி, பின்னர் மாநாட்டில் பங்கு பெற்றவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

## அரசுத் திட்டங்களைச் சிறந்த முறையில் செயற்படுத்தியமைக்காக:

# மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கேடயம் வழங்கினார்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 27.7.1994 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில், 1993-94-ஆம் ஆண்டில் சிறுசேமிப்பில் நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டை எய்திய மைக்காக, 22 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கேடயமும், கோவை, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு அம்பேத்கர், தர்மபுரி ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூடுதலாகத் தனிநபர் (Personal Award) விருதுகளையும் வழங்கினார்.

1993-94-ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தினைச் சிறப்பாக அமல்படுத்தி 100% இலக்கினை எய்தியமைக்காக கோவை, பெரியார், கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேடயங்களை வழங்கினார்.

1993-94-ஆம் ஆண்டில் குடும்ப நலத்திட்டத்தினைச் சிறந்த முறையில் செயற்படுத்தியமைக்காக, கன்னியாகுமரி மற்றும் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தங்கப் பதக்கமும், கேடயமும் வழங்கினார்.

1992-ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சி மொழித் திட்டத்தினைச் சிறப்பாகச் செயற்படுத்தியமைக்காக சென்னை, உள்ளாட்சி நிதிக் கணக்குகள் அலுவலகத்தின் சார்பாக, உள்ளாட்சி நிதிக்கணக்கு ஆராய்வாளர் அவர்களுக்கும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்காக அம்மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் கேடயமும் மற்றும் பாராட்டுச் சான்றிதழையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

## நூல் வெளியீடு

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் Village Database for Decentralised District Planning under DISNIC-Plan Programme என்ற புத்தகத்தினை வெளியிட்டார்கள். மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்களும் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு டி.எம். செல்வகணபதி அவர்களும் இதனைப் பெற்றுக் கொண்டார்கள்.































நன்றாகக் கட்டப்பட்ட வீட்டில் மழைநீர் நுழைவதில்லை; நற்சிந்தனை படைத்தவன் உள்ளத்தில் ஆசை நுழைவதில்லை.

புத்தர்

ஆராய்ந்தறிவதும், சிந்தனை செய்வதும் நம்முடைய உரிமை மட்டுமல்ல, உயர்ந்த கடமையும்.

இங்கர்சால்



1995 டிசம்பரில், சென்னையில் நடைபெறவிருக்கும் தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் குறித்து நடைபெற்ற கூட்டத்தின்போது, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், உள் விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைப்பது குறித்த வரைவுப் படங்களைப் பார்வையிட்டார். *(28.7.1994)*

# படமும் செய்தியும்



இந்தியாவிலுள்ள இங்கிலாந்து நாட்டின் துணைத் தூதர் திரு டேவிட் காக்கர்மேன், ஜப்பான் நாட்டுத் தூதராகச் செல்வதையொட்டி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். *(28.7.1994)*

தலைமைச் செயலகத்தில் அமைக்கப்பட்டிருந்த ஹட்கோ நிறுவன புகைப்படக் கண்காட்சியினை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிட்டார். மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி மற்றும் தலைமைச் செயலாளர் திரு என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., உடனிருக்கிறார்கள். *(28.7.1994)*






*1995* டிசம்பரில் சென்னையில் நடைபெறவிருக்கும் ஏழாவது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகள் குறித்த கூட்டம், சென்னைத் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. *(28.7.1994)*

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# 'கலைமாமணி விருது' வழங்கும் விழா

## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின், பாரம்பரியம் மிக்க கலைஞர்களையும், கலை வித்தகர்களையும், அடிப்படையாக விளங்குகின்ற கலைஞர்களையும், கலை வித்தகர்களையும், பேணிக் காக்கின்ற ஒரு பண்பாட்டு மையமாக, கலைக்கூடமாகத் திகழ்கின்ற, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தினரால் நடத்தப்பெறும், இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

மனிதனைப் பதப்படுத்தும் பல்வேறு கலைகள், இன்றும் தமிழகத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை, உலகம் முழுவதும் பறைசாற்றிக் கொண்டு வருகின்றன. அந்தக் கலைகளில், தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அந்தக் கலைகள் மென்மேலும் வளர்வதற்கு, அருந்தொண்டு ஆற்றிய, ஆற்றி வருகின்ற கலை வித்தகர்களுக்கு, தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும், இந்தக் கலைமாமணி விருதுகளை வழங்கியும், பரிசுகளை வழங்கியும் கௌரவித்து வருகின்றது. என்றைக்குத் தங்களுடைய கலைத் திறமைக்கு, மக்கள் மத்தியில் பாராட்டும், அங்கீகாரமும் கிடைக்கின்றதோ, அன்று தான் அந்தக் கலைஞர்கள், தங்களது வாழ்க்கையில், நிறைவு அடைந்ததாகக் கருதுவார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய நிறைவுடன் தான், சீரிய கலைப் பணிக்காகத் தமிழக மக்களின் சார்பில், தமிழக அரசே வழங்கும் விருதுகளைப் பெறுவதற்காக, முகத்தில் மலர்ச்சியுடனும், உள்ளத்தில் மகிழ்ச்சியுடனும் அமர்ந்திருக்கும் கலைஞர்களைக் காணும்போது என் மனம் பூரிப்பு அடைகின்றது.

தமிழ் மொழி, பண்பாட்டுச் செழுமையும், பாரம்பரியச் சிறப்பு மிக்க,' தொன்மையான மொழிகளில் ஒன்று. ஒரு மொழி,'a vehicle for communication', அதாவது ஒருவரின் எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த, அல்லது பிறருடன் பகிர்ந்து கொள்ள, உதவும் ஒரு சாதனமாகும். ஆனால் அந்த எண்ணங்களை, மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும்போதும், பகிர்ந்து கொள்ளும்போதும், ஒரு கலை உணர்வுடனும், கவி நயத்துடனும், செய்யும்போது, எண்ணங்கள் ஒரு புதிய வலிவையும், பொலிவையும் பெறுகின்றன. அந்த மொழியைப் பேசுகின்ற மக்களுக்கும், சமுதாயத்திற்கும், நலம் பயக்கும் வண்ணம், பண்பாட்டையும், வாழ்வியல் கோட்பாடுகளையும் உணர்த்தி, சிறக்கச் செய்யும் பணியை ஆற்றும் போது, மொழி, ஒரு சமுதாய மேம்பாட்டு நெறி முறையாகப் பிரகாசிக்கின்றது என்பதில் ஐயமில்லை.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே, வேறு எந்த மொழியிலும் இல்லாத வகையில், மொழியை இயல், இசை, நாடகம், என்ற மூன்று இனிய கலை வடிவங்களாகப் பிரித்தெடுத்து, அவற்றிற்கு இலக்கணமும் வகுத்ததோடு மட்டுமல்லாமல், மக்களின் வாழ்க்கையோடு கலையை இணையச் செய்து, 'தமிழ் மொழியும், கலையும், வாழ்வும் ஒன்றே' என்று பறைசாற்றியதை, உலகம் வியந்து போற்றுகின்றது. தனது சீரிளமைத் திறம் குன்றாமல், தமிழ் மொழி இன்று இமயமாய் உயர்ந்து நிற்கின்றது. முத்தமிழ் மொழியின் வளத்தை, முறையோடு போற்றிப் பாதுகாத்து வருகின்ற, இயல், இசை, நாடக மன்றத்தின் அரும்பணிகளுக்கு, எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, கடந்த 3 ஆண்டுகளாகத் தமிழகத்திலுள்ள பல்வேறு கலை வடிவங்களை, நலிவு அடையாமல், சிதைவடையாமல், கட்டிக் காப்பதிலும், அந்தக் கலைகளில் ஈடுபட்டுள்ள கலை வித்தகர்கள், பயன் பெறும் வண்ணமும், பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. மதம், இனம், மொழி, என்கின்ற எல்லைகளை எல்லாம் கடந்து, கலை என்பது, மனித இனத்திற்கு உரிய, மனித நேயமும், மனோபாவமும் வளர்ப்பதற்கான தூண்டுகோல்கள், என்ற பரந்த உணர்வின் அடிப்படையில், கலைமாமணி விருதுகள், தமிழ்க் கலைஞர்களுக்கு மட்டுமின்றி, பிற மாநிலங்களில் வாழும், தமிழர் அல்லாத கலை வித்தகர்களுக்கும் வழங்குகின்ற திட்டத்தை, உங்கள்

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:



சகோதரியின் அரசு தான், முதன் முதலில் அமல்படுத்தியுள்ளது என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கலை வடிவங்களையும், கலைக் களஞ்சியங்களையும், ஒரு குறுகிய எல்லைக்குள் வைக்காமல், பரந்த உலக நோக்கோடு, அவற்றை அணுக வேண்டும் என்பதே, எனது பேரவா !

கடந்த 20 ஆண்டுகளாக, 2700 நலிந்த கலைஞர்களுக்கு மட்டுமே, 250 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. கலை வித்தகர்கள் வாடினால், கலைகள்

## 'கலைமாமணி' விருது வழங்கும் விழா

இயல் இசை நாடகத் துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கும் விழா 29.7.94 வெள்ளிக் கிழமையன்று கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. இயல்-இசை-நாடகத் துறைகளில் சிறந்த சேவை புரிந்த 51 கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அன்றைய தினம் அவர்களுக்குக் கலைமாமணி விருது வழங்கும் விழா கோலாகலமாகத் தொடங்கியது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடைக்கு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வருகை புரிந்தவுடன் விழா மகிழ்ச்சி ஆரவாரத்துடன் தொடங்கியது. விழாவிற்கு வருகை புரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும் பொதுமக்களையும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு. குன்னக்குடி வைத்தியநாதன் வரவேற்றுப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, திரு குன்னக்குடி வைத்தியநாதன் பொன்னாடை போர்த்தினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் செயலாளர் திரு ஆர்.எஸ்.மனோகர் பொன்னாடை போர்த்தினார். அதனைத் தொடர்ந்து திரு ஆர்.எஸ்.மனோகர் அறிக்கை படித்தார்.

பின்னர், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.பொன்னுசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். அதனையடுத்து, இயல் இசை நாடகக் கலைகளில் சிறந்த சாதனைகள் புரிந்த 51 கலைஞர்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கலைமாமணி விருதுகளை வழங்கி, பொன்னாடையும் பொற்பதக்கமும் அணிவித்துக் கௌரவித்தார். மறைந்த 14 கலைமேதைகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தார். கலைமாமணி விருது பெற்ற மூத்த கலைஞர்களுக்கு - திருமதி பி. ஞானாம்பாள் (இசை நடன ஆர்மோனியக் கலைஞர்), திரு. திருக்கருகாவூர் டி.ஜி. சுப்பிரமணியம் (தவில் கலைஞர்), திரு. பி.சுந்தரராஜ் நாயுடு (கரகக் கலைஞர்), திரு. டி.பி.சாமிக்கண்ணு (நாடக நகைச்சுவைக் கலைஞர்) ஆகியோருக்குப் பொற்கிழிகளை மாண்புமிகு முதல்வர் வழங்கினார். சென்னை அழகிரி நாடக மன்றத்திற்கு, சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற் கேடயத்தையும் சிவகாசி ஆர்ட்ஸ் கிளப்பிற்கு, சிறந்த கலை நிறுவனத்திற்கான கேடயத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

-என் இளங்கோ



போடும், கலை வித்தகர்கள் நலிந்தால், கலைகளும் நலிந்து விடும் என்பதை, நான் நன்கு அறிந்திருந்த காரணத்தினால், கடந்த 3 ஆண்டுகளில், கூடுதலாகத் தொள்ளாயிரம் நலிந்த கலைஞர்களுக்கு, இந்த மாதாந்திர ஒய்வூதியத்தை அளிக்க, ஆணையிட்டேன் என்பதை, பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமின்றி, இந்த ஒய்வூதியத் தொகையை, 250 ரூபாயிலிருந்து, 400 ரூபாயாக உயர்த்தி வழங்கி வருவது, கலைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு, மிகுந்த மன மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என்பதை, நான் நன்கு அறிவேன்.

அற்புதமான கலைகளில் ஒன்றான நாடகக் கலை, நலிந்து விடக் கூடாது என்பதற்காக, நாடகக் கலைஞர்களின் வேண்டுகோளை ஏற்று, தமிழக அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், 50 சதவீதச் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்ய, உங்கள் சகோதரியின் அரசு, ஏற்கெனவே ஆணை பிறப்பித்துள்ளது. இன்று நாம் அமர்ந்திருக்கும் கலைவாணர் அரங்கம், எனது ஆணையின் பேரில், நாடகம் நடத்துவதற்குப் பாதி வாடகைக் கட்டணத்தில் அனுமதிக்கப்பட்டு வருகின்றது. தமிழகத்தின் புராதன மற்றும் நவீன கலைகளையும், கலை வடிவங்களையும், நன்முறையில் பாதுகாத்து, எதிர்காலச் சந்ததியினருக்கு விட்டுச் செல்வதற்குத் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம், பல புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்திற்கு, ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த, மானியத் தொகையை 13 லட்சம் ரூபாயிலிருந்து 22 லட்சம் ரூபாயாக உயர்த்தி உள்ளோம். மன்றத்திற்கு அளிக்கப்படும் மானியத் தொகை, இந்த ஆண்டு முதல் 22 லட்சம் ரூபாயிலிருந்து, 25 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர்.எஸ். மனோகர் கேட்டுக் கொண்ட பல கோரிக்கைகளை, நான் பரிசீலனை செய்து, விரைவில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டுப்புறக் கலைகள் நலியாமல் பாதுகாக்க, நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு, ஆடை அணிகலன்கள் வாங்கிக் கொள்வதற்கு, மானிய உதவி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றோம். நட்டுவாங்கக் கலை பயிற்றுவிப்போருக்கும், பயிலுவோருக்கும், உபகாரச் சம்பளமும், மதிப்பூதியமும் வழங்கப்பட்டு வருகின்றது. நாடகக் கலையை ஊக்குவிக்க, புதிய நாடகங்களுக்கு மானிய உதவி வழங்க, ஆணையிடப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, மறைந்து வருகின்ற அரிய கலை வடிவங்களை, வருங்காலச் சந்ததியினரும் கண்டு களிக்கும் வண்ணம், அவற்றை ஆவணங்களாக்கிப் பாதுகாக்கும் பணியை, உங்கள் சகோதரியின் அரசு, செயல்படுத்தி வருகிறது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலை வித்தகர்கள் பயன்பெறும் வண்ணம், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றக் கட்டடத்தில், கலை நூலகம் ஒன்றை அமைக்க, 50,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலத் தலைநகரில் மட்டுமின்றி, மாவட்டங்களுக்கும் கலைத்தொண்டு, கொண்டு செல்லப்பட வேண்டும் என்பதற்காகச் சலங்கை விழா 5 மாவட்டங்களிலும், 'கலை விற்பன்னர்கள் நிறைவு விழா' அவர்கள் பிறந்த 5 மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கலைமாமணி விருதினை, 51 கலை வித்தகர்களும், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கான பொற்கிழியை, 4 கலை வித்தகர்களும் பெறுகின்றார்கள். தாங்கள் எடுத்துக் கொண்ட பல்வேறு கலைத் துறைகளில், மெச்சத் தகுந்த சாதனைகளைப் புரிந்து, நம் அனைவரது பாராட்டுக்களையும், அன்பையும், ஒரு சேரப் பெறும் இவர்கள் அனைவருக்கும், விருதுகளை வழங்கிச் சிறப்பிக்கும் நல் வாய்ப்பு இன்று எனக்குக் கிடைத்ததை எண்ணி, நான் அகமகிழ்கின்றேன்.

தமிழகத்தின் கலைகள் நலிந்து விடாமல் பாதுகாப்பதிலும், பல்வேறு கலை வடிவங்களைப் போற்றிப் • பாதுகாப்பதிலும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர்

எம்.ஜி.ஆர். ஆகியோர் காட்டிய புனிதப்பாதையில், நடைபோட்டு வரும் நான், உள்ளார்ந்த ஈடு பாட்டுடன் செயல்பட்டு வரு கிறேன் என்பதைத் தெரிவிப்பதில், ஒரு தனி மனநிறைவை அடை கின்றேன்.



மிகச்சிறப்பாக நடந்தேறிக் கொண்டிருக்கும், இந்த இனிய விழாவில், சாதனைகள் பல புரிந்து, தமிழ்நாட்டின் கலைப் பாரம்பரியத்தை, மேன்மையுறச் செய்த, 14 கலை மேதைகளின் திரு வுருவப்படங்களை, இன்று திறந்து வைத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இயல், இசை, நாடகம், ஆகிய மூன்று துறை களிலும், தமது அரிய கலைச் சேவையினால், பேரும், புகழும் பெற்று, தாங்கள் விட்டுச் சென்ற கலைப் படைப்புகளின் வடிவில், இன்றளவும், நம் அனைவரின் மனங்களிலும், பசுமையாக வாழ்ந்து கொண்டிருக்கும், இந்தக் கலையுலகப் பெரியோர்களை, வணங்கி மகிழும் நல்வாய்ப்பு, இன்று எனக்குக் கிடைத்ததை எண்ணி நான் மிக்க மனநிறைவு அடைகிறேன்.



விருதுகளையும், நமது பாராட்டு தல்களையும், ஒருசேரப் பெறும் கலை வித்தகர்கள் அனைவரும்.



நீங்கள் எடுத்துக் கொண்ட துறை களில், மேலும் பேரும்புகழும் பெற வேண்டும்; தமிழகக் கலைப் பாரம் பரியத்தையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும், சிதைவின்றிக் காப்பாற்றிட வேண்டும்; உங்கள் அரிய தொண்டினைச் சோர் வின்றி, தொடர்ந்து ஆற்றிட வேண்டும் என்ற, எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் ஏற்றுக் கொண்ட துறையில், மென்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று, சீரிய கலைப் பணி ஆற்றி, ஓங்கு புகழ் பெற வேண்டும் என்ற, எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, நீங்கள் அனைவரும், எல்லா வளங்களும், நலன்களும் பெற்று, நீடூழி வாழ வேண்டும் என்ற, எனது பேரவாவினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

## 1993–94 ஆம் ஆண்டின் "கலைமாமணி" விருது பெற்ற கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| திரு. லா.ச. ராமாமிருதம் | - | இயற்றமிழ்க் கலைஞர் |
| திருமதி டி.பட்டம்மாள் | - | இசைப் பாடலாசிரியர் |
| கடலூர் திரு. எம். சுப்பிரமணியம் | | இசை ஆசிரியர் |
| தஞ்சாவூர் திரு. எஸ். கல்யாணராமன் | - | இசைக் கலைஞர் |
| திருமதி சுதா ரகுநாதன் | - | இசைக் கலைஞர் |
| திருமதி ராதா நாராயணன் | - | வயலின் கலைஞர் |
| திரு. கே.எஸ். செல்லப்பா | - | மிருதங்கக் கலைஞர் |
| திரு.வி. நாகராஜன் | - | கஞ்சிராக் கலைஞர் |
| திருச்சி திரு. ஆர்.தாயுமானவன் | - | கொன்னக்கோல் கலைஞர் |
| திரு. ஷேக் மெகபூப் சுபானி | - | நாதசுரக் கலைஞர் |
| திருமதி காலிசாபி மெகபூப் | - | நாதசுரக் கலைஞர் |
| கீழ்வேளூர் திரு. என்.ஜி. கணேசன் | - | நாதசுரக் கலைஞர் |
| திருவொற்றியூர் திரு. டி.ஏ. பாலசுந்தரம் | - | தவில் கலைஞர் |
| திருமதி சரோஜா சுந்தரம் | - | திருமுறை தேவார இசைக் கலைஞர் |
| திருமதி என்.சி. சௌந்தரவல்லி | - | இறையருட் பாடல் கலைஞர் |
| திருமதி கே. வைஜயந்திமாலா நாராயணன் | - | கதாகாலட்சேபக் கலைஞர் |
| திரு. நா. முத்துமணி | - | பாகவதமேளாக் கலைஞர் |
| திரு. வேம்பட்டி சின்னசத்தியம் | - | குச்சுப்புடி நாட்டிய ஆசிரியர் |
| பம்பாய் திரு. கல்யாணசுந்தரம் | - | பரதநாட்டிய ஆசிரியர் |
| திருமதி சந்திரா தண்டாயுதபாணி | - | பரதநாட்டிய ஆசிரியர் |
| செல்வி மாளவிகா சருக்கை | - | பரதநாட்டியக் கலைஞர் |
| திருமதி அபிராமி ராஜன் | - | பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| திரு.ஆர். நடராஜன் பிள்ளை (பரோடா) | - | பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர் |
| திரு.பி. சங்கீத ராவ் | - | குச்சுப்புடி நாட்டிய -நாடக இசை அமைப்பாளர் |
| திரு.ஜி. நாகராஜன் | - | பரதநாட்டிய புல்லாங்குழல் கலைஞர். |
| திரு.கே.பி. அறிவானந்தம் | - | நாடக ஆசிரியர் |
| திரு. எஸ். பிரபாகர் | - | நாடகத் தயாரிப்பாளர். |

| | | |
|---|---|---|
| "கம்பர்" திரு. டி. ஜெயராமன் | - | நாடக நடிகர். |
| திரு. எஸ்.வி. சேகர் | - | நாடக நடிகர் |
| திருமதி ஜே.ஜி. சியாமளா | - | நாடக நடிகை |
| "அப்பச்சி" திரு. ஆர்.எம். கிருஷ்ணன் | - | நாடக நகைச்சுவைக் கலைஞர் |
| "காத்தாடி" திரு. எஸ். ராமமூர்த்தி | - | தொழில்முறை அல்லாத நாடக நடிகர். |
| திரு. கோ. தர்மராஜன் | - | நாடக ஓவியக் கலைஞர் |
| ஆனந்தி பிலிம்ஸ் திரு. வி. மோகன் | - | திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. ஆர்.வி. உதயகுமார் | - | திரைப்பட இயக்குநர் |
| திரு. ஆர். சரத்குமார் | - | திரைப்பட நடிகர் |
| செல்வி சுகன்யா | - | திரைப்பட நடிகை |
| திரு.டெல்லி கணேஷ் | - | திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திருமதி சி.கே. சரஸ்வதி | - | பழம்பெரும் திரைப்பட நடிகை. |
| "வியட்நாம் வீடு" திரு. சுந்தரம் | - | திரைப்பட உரையாடல் ஆசிரியர் |
| செல்வி சுவர்ணலதா | - | திரைப்படப் பின்னணிப் பாடகி. |
| திரு. ஓம். முத்துமாரி | - | தெருக்கூத்துக் கலைஞர் |
| திருமதி ஏ. வேல்கனி | - | வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| திரு. வீ. வேலு | - | கரக ஆட்டக் கலைஞர் |
| திரு. பி.எம். வீராச்சாமி | - | நையாண்டி மேள நாதசுரக் கலைஞர் |
| திரு. பி. மருதப்பா | - | இசை நாடக நடிகர் |
| திருமதி பி.எல். ரஞ்சனி | - | இசை நாடக நடிகை |
| திரு. டி.வி. இரத்தினப்பா | - | இசை நாடக மிருதங்கக் கலைஞர் |
| அறந்தாங்கி திரு. ஏ. எம்.யூசுப் | - | இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| திரு. ஜி. பரமசிவ ராவ் | - | பாவைக்கூத்துக் கலைஞர் |
| திரு. ஆர்.ஜி. மூர்த்தி | - | விகடக் கலைஞர் |

### சிறந்த நாடகக் குழு

திரு "காஞ்சி" ரங்கமணி அவர்களின் "அழகிரி நாடக மன்றம்"

### சிறந்த கலை நிறுவனம்

சிவகாசி ஆர்ட்ஸ் கிளப், சிவகாசி.

### பொற்கிழி பெறும் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி பி. ஞானாம்பாள் | - | இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| திருக்கருகாவூர் திரு.டி.ஜி.சுப்பிரமணியம் | | தவில் கலைஞர் |
| திரு.பி. சுந்தரராஜ் நாயுடு | - | கரகக் கலைஞர் |
| திரு.டி.பி. சாமிக்கண்ணு | - | நாடக நகைச்சுவைக் கலைஞர் |

# திறந்து வைக்கப்பட்ட மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்கள்

| | | |
|---|---|---|
| கி.வா. ஜகந்நாதன் | - | இயல் துறை |
| பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் | - | இயல் துறை |
| டைகர் வரதாச்சாரியார் | - | இசைத்துறை |
| டாக்டர் எஸ். இராமநாதன் | - | இசைத்துறை |
| குன்னக்குடி வெங்கட்ராம அய்யர் | - | இசைத்துறை |
| சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் | - | சங்கீத உபன்யாசம் |
| ஆர்.கே. வெங்கட்ராம சாஸ்திரி | - | வயலின் |
| பரூர் சுந்தரம் அய்யர் | - | வயலின் |
| காரைக்குடி முத்து அய்யர் | - | மிருதங்கம் |
| சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளை | - | பரதநாட்டியம் மற்றும் இசைத் துறை |
| ஒய்.ஜி.பார்த்தசாரதி | - | நாடகத் துறை |
| "தேவி நாடக சபா" ரத்தினம் | - | நாடகத் துறை |
| பி.எஸ். இராமையா | - | நாடகத்துறை |
| வி.ஏ. மகாதேவன் | - | இசை - நாடகத் துறை |



இசைக் கலையும் நாடகக் கலையும் இணைபிரியாதவை. நாட்டியக் கலைக்கு அடிப்படை பாடல்கள். அந்தப் பாடல்கள் நாட்டுப் பாடல்களாகவும், பக்திப் பாடல்களாகவும், நாட்டியத்துக்கே உரித்தான நாட்டியப் பாடல்களாகவும், விளங்குவதைப் பார்க்கிறோம்.

இந்த இசைக் கலையையும், ஆடற் கலையையும், சிற்பக் கலையிலும், ஓவியக் கலையிலும், போற்றி வளர்த்த ஒரு புகழ் மிக்க மரபு, நம் தமிழ் மரபு. ஆலயங்களும், ஆலயம் சார்ந்த இடங்களும், இந்த அரிய உண்மைக்கு, அற்புதமான சான்றுகளாக இன்றும் திகழ்கின்றன.



இப்படிப்பட்ட முத்தமிழை முறையாகக் காப்பதில், தமிழர்களுக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கின்றதோ, அவ்வளவு பொறுப்பு தமிழக அரசுக்கும் இருக்கின்றது.



ஆண்டுதோறும், கலைமாமணி விருது வழங்கி, உணர்ச்சி பூர்வமாக முத்தமிழ் வல்ல பெருமக்களுக்கு ஊக்கம் அளிக்கின்றோம்; அதனால் நாம் உவகையடைகின்றோம். கலைக்கு, கற்றவர், கல்லாதவர் என்ற பேதமில்லை: ஆகவே தான், இந்த மண்ணிலே மலர்ந்து, மணம் பரப்பி வருகின்ற, நாட்டுப்புறக் கலைகளுக்கும், நாட்டுப்புறக் கலை வித்தகர்களுக்கும், அதே சிறப்பை நாம் செய்து வருகிறோம்.

**'புரட்சித்தலைவியின் முழக்கம்' - தொகுதி-2-லிருந்து.**

சிறு சேமிப்பு உங்கள் குடும்பத்தின் முதல் செல்வாக இருக்கட்டும்

## செழிப்பான வாழ்விற்கு இன்றே முதலீடு செய்வீர்

# கிசான் விகாஸ் பத்திரம்

**உங்கள் முதலீடு 5½ ஆண்டுகளில் இருமடங்கு வளர்கிறது.**

### சிறப்பு அம்சங்கள்

- ஐந்தரை ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகிறது.
- 18.18% சாதாரண வட்டி.
- பத்திரங்கள் ரூ.100/-, ரூ.500/-, ரூ.1,000/-, ரூ.5,000/-, ரூ.10,000/- மதிப்புகளில் கிடைக்கின்றன.
- அவசரத் தேவைக்கு 2½ ஆண்டுகளில் வட்டியுடன் பணம் திரும்பப்பெற வசதி.

**ரூ.1000/- முதலீட்டிற்கு கிடைக்கும் தொகை**

| ஆண்டுகள் | தொகை |
|---|---|
| 2½ ஆண்டுகளில் | ரூ.1,310/- |
| 3 ஆண்டுகளில் | ரூ.1,420/- |
| 3½ ஆண்டுகளில் | ரூ.1,500/- |
| 4 ஆண்டுகளில் | ரூ.1,620/- |
| 4½ ஆண்டுகளில் | ரூ.1,730/- |
| 5 ஆண்டுகளில் | ரூ.1,860/- |
| 5½ ஆண்டுகளில் | ரூ.2000/- |

1.4.1994 முதல் தமிழ்நாட்டில் செய்யப்படும் முதலீட்டிற்கு

**2%**

சிறப்பு ஊக்கத்தொகை.





தமிழ்நாட்டில் செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு இலவச பரிசுக் கூப்பன் பெற்று, கவர்ச்சிகரமான மாருதி ஆம்னிவேன் அல்லது டிராக்டர் (இயந்திரக் கலப்பையுடன்) உட்பட 619 பரிசுகளை வெல்ல வாய்ப்பு.

மேலும் விவரங்களுக்கு

**ஆணையர்,**

சென்னை மாநகராட்சி (சி.சே.பிரிவு), சென்னை-3,
தொலைபேசி: 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம்,
92, அண்ணா சாலை, சென்னை-2,
தொலைபேசி: 849962

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

**இயக்குநர், சிறு சேமிப்புத் துறை**

*சபர் மேன்ஷன், 621, அண்ணா சாலை,*
*சென்னை - 600 006.*
*தொலைபேசி: 8251784/8251685.*

DIPR/519/DIS/94

*சிறு குடும்பம் செல்வக் குடும்பம்*

இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு



# பணிநிறைவுப் பாராட்டு விழா

செய்தி- மக்கள் தொடர்புத் துறையின் இணை இயக்குநர் திரு. எஸ். நல்லரசு அவர்களின் பணிநிறைவுப் பாராட்டு விழா *30.7.94* அன்று இராஜாஜி மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

இணை இயக்குநர் திரு பா. செயப்பிரகாசம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், "திரு. நல்லரசு அவர்கள், நமது இதயத்துப் படிக் கட்டுகளில் எப்போதும் அமர்ந் திருப்பவர்" என்றார்.

முன்னாள் இணை இயக்குநர் திரு கே. நடராஜன் அவர்கள் பேசுகையில், "மாணவப் பருவத் திலேயே முதலாவதாக வந்த இவர், தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை மிக்கவர்" என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் பேசு கையில், "திரு நல்லரசு அவர்கள் செயல்திறன், ஆற்றல் திறன் படைத்தவர். ஒரு செயலை ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செய்யும் திறம் என்னைக் கவர்ந் தது. அவர் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என்றார்.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி. கே. கரியாலி, இ.ஆ.ப., அவர்கள் பேசு கையில், "அரசு ஊழியர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் இவர் வழியை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும்" என்றார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் பேசுகை யில், "சிந்தனை, மொழி, செயல் திறன்களைக் கோடிட்டுக் காட்டு கிற சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவர் இவர் என்பதை இந்த விழா எடுத்துக்காட்டுகிறது. அரசுப் பணியில் இருப்பவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அடையாளச் சின்ன மாக விளங்குபவர் இவர். அழகிய ரோஜாவுக்கு வண்ணந் தீட்டிப் பார்க்கத் தேவையில்லை; தோகை மயிலுக்குப் பட்டாடை கட்டிப் பார்க்கத் தேவை யில்லை.

"அரசுப் பணியில் அவர் ஓய்வு பெற்றாலும், அவரது சிந்தனை செயல் திறன்இந்தநல்லஅரசுக்குப்





# தமிழ்நாட்டில் மேலும் 15 இடங்கள் பண்பாட்டு மரபுரிமை நகரங்களாகப் பராமரிக்கப்படும்!

கடந்த 1992-ஆம் ஆண்டு மாமல்லபுரத்தில் தமிழக அரசு சுற்றுலாத் துறை மூலம் நடைபெற்ற 'நாட்டிய விழாவில்' கலந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், வரலாற்றுச் சிறப்புகள் நிறையப்பெற்ற பல்வேறு தமிழகச் சுற்றுலாத் தலங்கள் போற்றப்பட வேண்டும், அத்தகைய இடங்களில் உள்ள சுற்றுப்புறச் சூழலைக் கெடுக்கும் சீர்கேடுகளை அகற்றிட உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்தினை வலியுறுத்தியிருந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருந்த கருத்திற்கு ஏற்ப, தமிழகத்திலுள்ள முக்கியச் சுற்றுலா நகரங்களான 23 இடங்கள் (Heritage Town) என்று கூறப்படும் பண்பாட்டு மரபுரிமை நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது, மேலும் கீழ்க்கண்ட 15 இடங்களை அத்தகைய பண்பாட்டு மரபுரிமை நகரங்களாக (Heritage Town) பராமரிக்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

ஸ்ரீபெரும்புதூர், திருநெல்வேலி, திருச்செங்கோடு, காரைக்குடி, பேரூர், பவானி, பிச்சாவரம், மருதூர் (வள்ளலார் பிறந்த இடம்) குறிஞ்சிப்பாடி திருமயம், சித்தன்னவாசல், ஆவுடையார்கோவில், பத்மநாபபுரம், குளச்சல் (கன்னியாகுமரி மாவட்டம்), மரக்காணம் ஆகியவையே அவை.

இந்த நகரங்களில் மரபுரிமை பாதுகாக்கப்பட்டு, இவை சரித்திரப் புகழ்பெற்ற இடங்களாகவும், சிறந்த சுற்றுலாத் தலங்களாகவும் அமைய உரிய மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தமிழக அரசின் சுற்றுலாத் துறை விரைந்து எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

---

பயன்படவேண்டும். நல்லரசு நல்ல உள்ளம், நல்ல எண்ணம் படைத்தவர். இலக்கியவாதி, மொழிப்பற்று மிக்கவர்" என்றார்.

விழாக்குழுவினர் சார்பிலும் மற்றும் ஒட்டுநர்கள் சங்கச் சார்பிலும் நினைவுப் பரிசுகளை மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் திரு. நல்லரசு அவர்களுக்கு வழங்கினார்.

திரு எஸ். நல்லரசு அவர்கள், தமது வரவேற்புரையில் நான் பெற்றிருக்கிற தமிழ்ப் பற்று, சுயமரியாதை, உணர்வு எல்லாம் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தந்த பிச்சை " என்றார்.

செய்தி -மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு ஆர். பரதன் அவர்கள் நன்றி கூறுகையில் "இது ஒரு சாதாரண நிகழ்ச்சியாக அல்லாமல், ஒரு வழிகாட்டும் நிகழ்ச்சியாக இதயத்து உணர்வுகளைப் பரிமாறிக் கொள்கிற விழாவாக அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையல்ல!" என்றார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு. டி.பி.எஸ். சுந்தரநாதன் அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

விழாவில், செய்தி-மக்கள் தொடர்புத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் அதிக அளவில் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

-பி.வி.கிரி.

# புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பள்ளிக்குழந்தைகள் சிறப்பு நல முகாம் தொடக்க விழா.

நாகை காயிதே மில்லத் மாவட்டம், திருப்பூண்டி அரசினர் ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த திருப்பூண்டி ஊராட்சியில் உள்ள காரைநகர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பள்ளிக் குழந்தைகள் சிறப்பு நல முகாம் தொடக்க விழா 21.7.94 அன்று நடைபெற்றது.

நாகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கோடிமாரி அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர் தமது தலைமை உரையில், முகாமின் சிறப்பு அம்சங்கள் பற்றியும், தமிழ்நாடு முதலமைச்சர் ஏழைக் குழந்தைகளுக்கு – குறிப்பாக, பெண் குழந்தைகளுக்காக ஏற்படுத்திவரும் உதவித் திட்டங்கள் குறித்தும் எடுத்துக்கூறினார்.

நாகை சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் டாக்டர் எம்.சி. கண்ணன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார். நாகை சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் டாக்டர் பி.செல்வராஜ் அவர்கள் முன்னிலை வகித்து முகாமின் நோக்கம் பற்றிப் பேசினார்.

நாகை காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.சாவர்க்கர் அவர்கள், குத்துவிளக்கு ஏற்றி முகாமினைத் தொடங்கி வைத்துப் பேசினார். மாவட்ட ஆட்சித் தலைவர் தமது உரையில், இம்முகாம்களில் 5 வயது முதல் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளை மருத்துவக் குழுவினர் வாரந்தோறும் வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் உடல் பரிசோதனை செய்து தக்க சிகிச்சையும், ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என்றும், இதனால் ஏழை எளிய குழந்தைகள் மிகவும் பயன்பெறுவார்கள் என்றும் கூறினார்.

மேலும், நாகை முதன்மைக் கல்வி அலுவலர் திரு.டி.லிங்கையா, மாவட்டக் கல்வி அலுவலர் திரு. விக்டர், உதவிக் கல்வி அலுவலர் திரு.எஸ் சதாசிவம், பள்ளித் தலைமை ஆசிரியர் திரு பாலசுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

மருத்துவக்குழுவைச் சார்ந்த டாக்டர் ஜி.வீரராகவன், டாக்டர். எஸ்.சாமிநாதன் மற்றும் டாக்டர் எஸ்.வெற்றிச்செல்வி ஆகியோர் பள்ளிக் குழந்தைகளை பரிசோதனை செய்து அதற்கான அட்டைகளை வழங்கினர்.

இதற்கான ஏற்பாடுகளைத் திருப்பூண்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலைய வட்டாரச் சுகாதார மேற்பார்வையாளர் திரு.ஆர். ஹரிஹர சுப்பிரமணியன் மற்றும் வட்டார விரிவாக்கக் கல்வியாளர் திரு. ஏ.எஸ். ரெத்தினசாமி ஆகியோர் செய்து இருந்தனர்.

முடிவில் திருப்பூண்டி அரசு ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் எஸ்.வெற்றிச்செல்வி நன்றி கூறினார்.

-எஸ்.தீனதயாளன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகை காயிதேமில்லத் மாவட்டம்



# 1300 ஆண்டுகட்கு முற்பட்ட அரியதொரு நடுகல் கண்டுபிடிப்பு!



விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம், திண்டிவனம் வட்டம் செண்டியம் பாக்கத்தில் அண்மையில் அரியதொரு நடுகல் லினைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. இந் நடு கல்லில் வட்டெழுத்தில் கல்வெட்டு காணப் படுகிறது. விழுப்புரம்-இராமசாமி படையாட்சி யார் மாவட்டத்தில், வட்டெழுத்தில் பொறிக் கப்பட்ட நடுகல் கிடைத்துள்ளது, இதுவே முதன்முறை என்பது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும்.

விழுப்புரத்தைச் சார்ந்த ஆசிரியர் திரு. வீரராகவன் அவர்கள் முதலில் இதனைக் கண்டறிந்து இத்துறைக்குத் தகவல் அளித்ததன் பேரில், இக்கல்வெட்டு படியெடுக்கப்பட்டுத் துறையின் கல்வெட்டாய்வாளர் திரு. இராச கோபால் அவர்களால் படிக்கப்பட்டுள்ளது.

பலகைக் கல்லில் வீரனுடைய உருவமும், கல்வெட்டும் பொறிக்கப்பட்டுக் காணப் படுகிறது. ஊரின் வடக்குத் திசையில் நிறுத்தப்பட்டுள்ள இந்நடுகல்லைத் துர்கை அம்மன் என்று கூறி இவ்வூர் மக்கள் வழிபாடு செய்து வருகிறார்கள்.

சிற்பத்தில் உள்ள வீரன் நேராக நின்ற நிலையில் காணப்படுகிறான். வலது கையில் நீண்ட கத்தியும் இடது கையில் கேடயமும் ஏந்தியுள்ளான். இடையை ஒட்டிக் குறைவாளொன்று செருகப்பட்டுள்ளது. இவ்வீரனின் இருபுறமும் பெண்கள் இருவர் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளனர். இருவரும் முறையே வலது, இடது கரங்களில் யாதோ ஒரு பொருளைப் பிடித்துள்ளனர். இடப்புறமுள்ள பெண்ணின் அருகே குத்து விளக்கொன்று காணப்படுகிறது. நடுகல்லிலுள்ள சிற்பங்களில் உருவமைதியைக் கொண்டு இதன் காலத்தைக் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

வீரனுடைய தலைக்கு அருகே வலப்பக்கத்தில் வட்டெழுத்தில் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. ஆறு வரிகளில் அமைந்துள்ள இக்கல்வெட்டில் ஓய்மா நாட்டு அருகாவூரைச் சார்ந்த வீரன் பசுக் கூட்டத்தைக் கவர்ந்து செல்ல முயன்றபோது இறந்துள்ளான் என்ற செய்தி காணப்படுகிறது. பாண அல்லது கங்க அரசன் ஒருவனுடைய குறுநிலத் தலைவனாக இவ்வீரன் இருந்துள்ளான் என்பதையும் இக்கல்வெட்டால் அறிகிறோம். ஆனால், மண்ணின் பெயர் குறிக்கப்பெறவில்லை. எழுத்தமைதி கொண்டு இக்கல்வெட்டு கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று உறுதியாகக் கருதலாம்.

**- நடன காசிநாதன்**
**இயக்குநர்**
**தொல்பொருள் ஆய்வுத் துறை, சென்னை.**



# இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.1 கோடி செலவில் எம்.ஜி.ஆர். விளையாட்டு வளாகம்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் இயங்கி வரும் தமிழக அரசு, விளையாட்டுத் துறையில் வியக்கத் தகு சாதனைகளை உருவாக்கி வருகிறது.

தமிழக அரசு இராமநாதபுரம் மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அருகில் விளையாட்டரங்கம் அமைப்பதற்கான நிலத்தை ஒதுக்கி உள்ளது. இப்பகுதிக்கு எம்.ஜி.ஆர். வளாகம் எனப் பெயரிடப்பட்டு உள்ளது. இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கத்திற்கான கால்கோள் 17.2.94 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் நாட்டப்பட்டது. இவ் விளையாட்டு அரங்கத்திற்கான கட்டுமானப் பணித் தொடக்க விழா 9.7.94 அன்று இராமநாதபுரத்தில் நடைபெற்றது.

இவ்விளையாட்டரங்கத்திற்கான கட்டுமானத் தொடக்க விழா நிகழ்ச்சிக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இல. கிருட்டிணன் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. வி. சத்தியமூர்த்தி வரவேற்று விழாப் பேருரையாற்றினார். சீதக்காதி அறக்கட்டளை நிறுவனர் அல்ஹாஜ் பி.எஸ். அப்துர் ரஹ்மான் அவர்கள் பங்கேற்று கட்டுமானப் பணியினைத் தொடக்கி வைத்தார். பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் எம்.ஜி.ஆர். வளாகம் அமைப்பதற்காக ரூ.25 இல்ட்சம் மதிக்கத் தக்கதாக 14 ஏக்கர் நிலம் பெருந்திட்ட வளாகத்தில் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. பணிகள் மூன்று பகுதிகளாக நடைபெறவுள்ளன

இதில் முதல் பகுதியாக, மாவட்ட விளையாட்டு அரங்க அலுவலகக் கட்டடம், பார்வையாளர் பகுதி போன்ற அமைப்புகளுக்காக ரூ.25 இலட்சம் மதிப்பில் கீழக்கரை வள்ளல் சீதக்காதி அறக்கட்டளையின் சார்பில் கட்டிக் கொடுக்கப்பட உள்ளது. இதில் முக்கியப்பிரமுகர்களுக்கான இருக்கைகள் மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகம், உடற்பயிற்சிக்கூடம், வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் அறை போன்ற வசதிகள் அமையும்.

முதல் பகுதியில் இரண்டாவது கட்டமாக மைதானங்கள் அமைக்க மாநில அரசு 25 இலட்சம் மானியம் வழங்குகிறது. இதில், 400 மீட்டர் தடகள ஓடுபாதை 1, கால்பந்து மைதானம் 1, ஹாக்கி மைதானம் 1, மின்னொளியுடன் கூடிய கூடைப்பந்து சிமிண்ட் மைதானம் 2, கைப்பந்து மைதானம் 2, மின்னொளியுடன் கூடிய டென்னிஸ் மைதானம் 1, கோ-கோ மைதானம் 2, கபாடி மைதானம் 2, மற்றும் விளையாட்டு அரங்கைச் சுற்றி மதில் சுவரும் கட்டப்பட உள்ளது.

இரண்டாவது பகுதியாக, மத்திய அரசு மானியம் ரூ.50 இலட்சம் பெறப்பட்டு உள்விளையாட்டு அரங்கம் மற்றும் நவீன நீச்சல் குளமும், மூன்றாவது பகுதியாக விளையாட்டு விடுதியும் கட்டப்படவுள்ளது.

சீதக்காதி அறக்கட்டளையின் சார்பில் கட்டிக் கொடுக்கப்பட இருக்கும் பகுதிக்குச் "சீதக்காதி சேதுபதி அரங்கம்" என்று பெயரிடவும், அனைத்து மைதானங்களுடன் கூடிய விளையாட்டு வளாகத்திற்கு "எம்.ஜி.ஆர் வளாகம்" என்று பெயரிடவும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர், அரசு அலுவலர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், நன்கொடையாளர்களைக் கொண்டு விளையாட்டரங்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் டி. அரவிந்தராஜ் அவர்கள் ரூ.20,000 நன்கொடை வழங்கியுள்ளார்.

இந்த விளையாட்டரங்கமானது மொத்தம் ரூ.1 கோடி செலவில் மிகப் பிரமாண்டமான முறையில் அமைக்கப்படவுள்ளது.

**- துரை. ராஜ்குமார்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.



# ஆலய ஆன்மீகச் சுற்றுலா

அருளாளர்களின் ஆன்மஞான அனுபவங்களால் நிறுவப் பெற்ற தமிழகத்தின் திருக்கோயில்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. அறநெறி வளர்க்கும் அருட் கருவூலங்களான இத் தெய்வத் திருத்தலங்களை, முக்கிய தென்னகத் திருக்கோவில்களை நேரிலே தரிசித்து அருள் பெற்றிட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகமும், தென்னக ரெயில்வே துறையும் இணைந்து புதியதொரு சுற்றுலாத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

'ஆலய ரெயில் ஆன்மீகச் சுற்றுலா, என்னும் இந்தப் புதிய சுற்றுலாத் திட்டம், ஆன்மீக நலமும் அருள் நலமும் நாடுகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு ஓர் அருவிருந்தாகும். இத்திட்டத்தின் செயற்பாட்டினை விளக்கிட, செய்தியாளர்களை மைய அரசின் பத்திரிகைத் தகவல் அலுவலகமும் தென்னக ரெயில்வே மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து அழைத்துச் சென்றது.

சிங்காரச் சென்னையிலிருந்து முதல்நாள் இரவு புகைவண்டியிலே புறப்பட்டு, மறுநாள் காலை சிதம்பரத்தில் இறங்கி, தமிழ்நாடு ஓட்டலில் சிறிதே ஓய்வு. அங்கே காலைக் காப்பி மற்றும் சிற்றுண்டிக்குப் பின் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தில் பயணம் தொடக்கம். முதலில் ஆடலரசன் தில்லை அம்பலக்கூத்தன் நடராசன் சன்னதியில் ஆரம்பிக்கிறது கோவில் உலா; பின், வைத்தீஸ்வரன் கோவில் வல்வினைகள் யாவும் தீர்க்கவல்ல வைத்தீஸ்வரன் தரிசனம்; தொடர்ந்து, 'என்றும் 16' என்று வாழும் மார்க்கண்டேயனுக்கு அருள் கொடுக்க எமனை வென்று எம்பெருமான் காலசம்ஹார மூர்த்தியாய்க் காட்சி தந்த திருக்கோயில் தன் பக்தனின் சொல் காக்க காதணியைக் கழற்றி நிலவுக் காட்சியெனக் காணவைத்த அபிராமித் தாய் ஆசி தரும் அருட்கோயில் திருக்கடையூர் திருக்கோயில் தரிசனம், அடுத்து முன்பு நளனுக்கும் பின்பு தன்பால் அன்பு உளனுக்கும் என யாவருக்கும் சனிபகவான் அருள் வழங்கும் திருநள்ளாற்றுத் தரிசனம்; நாகூர் ஆண்டகை சுவாமிகள் அருள் வழங்கும் நாகூர் தர்கா; முடிந்ததும் சுத்துகடல் சூழ் நாகை நோக்கிப் பயணம்; அங்கே, தமிழ்நாடு ஓட்டலில் மனம் மகிழ மதிய உணவு; தொடர்ந்து, நீலக்கடல் ஓரத்திலிருந்து நீடு வாழ வளமளிக்கும் அன்னை வேளாங்கண்ணி ஆலயம்; அங்கிருந்து, கும்பகோணத்திற்கு அருகே திருநாகேஸ்வரம் உப்பிலியப்பனாம் ஒப்பிலியப்பன் கோவிலில் என்னப்பன் பொன்னப்பனின் தரிசனம்; முடிந்ததும், கும்பகோணம் மகாமக நாயகர் கும்பேசர் திருக்காட்சி, அடுத்து, அறுபடைவீட்டில் ஒரு படை வீடு. அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையன் அருள் பாலிக்கும் சுவாமிமலை; அங்கே, திருமுருகன் அருட்காட்சிக்குப் பின் தஞ்சைப் பெரியகோவிலாம் பெருவுடையார் திருக்கோயில் தரிசனத்துடன் முடிகின்றது கோவில் உலா.

உலா முடிந்ததும், தஞ்சை தமிழ்நாடு ஓட்டலில் இரவு விருந்து முடித்து புறப்படுகிறோம்.

பயணக் களைப்பைப் பறக்கடித்து பயணிகளுக்கு இன்பக்களிப்பை வழங்கும் வகையில், இரயில் பயணத்தையும் பேருந்துப் பயணத்தையும் இணைத்து, தமிழக அரசு தயாரித்து வழங்கியுள்ள இச்சுற்றுலா வயது முதிர்ந்தவர்களுக்கு மட்டுமின்றி, வாலிப மிடுக்கான சுற்றுலாப்பயணிகளையும் ஈர்க்க வல்லதாக அமைந்துள்ளது.

மேலும், காலைக்காப்பி, சிற்றுண்டி, மதிய உணவு, மாலைத் தேநீர், இரவு விருந்து என யாவும் சுற்றுலாப் பயணத்திற்கென வாங்கப்படும் கட்டணத்திலேயே வழங்கப் படுவது இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நாம் புறப்பட்ட நேரத்திலிருந்து திரும்ப வரும் நேரம் வரை நமது ஒவ்வொரு தேவைகளையும் தனது பொறுப்பாக ஏற்று செயல்படும் இந்த ஆலயரயிலின் ஆன்மீகச் சுற்றுலா, தமிழகச் சுற்றுலாத் திட்டங் களிலேயே ஒரு தலைசிறந்த திட்டம் என்றால் அது மிகையல்ல!

-சாரதி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி
HTA 7556.95




